# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம்!




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் ஒன்றிய பா.ஜ.க. அரசு பட்ஜெட்டில் தமிழகத்தை வஞ்சித்ததைக் கண்டித்து சண்முகராஜா கலை அரங்கில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு முன்னாள் அமைச்சரும், மாநில இலக்கிய அணி புரவலர் மு.தென்னவன் தலைமை வகித்தார். அயலக அணி செயலாளர் எம்.எம்.எ.அப்துல்லா எம்.பி., முன்னிலை வகித்தார். இதில் எழுத்தாளர் திருமதி ஆண்டாள் பிரியதர்ஷிணி, தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ. கணேசன், துணைச் செயலாளர்கள் மணிமுத்து, நகர்கழக செயலாளர்கள் சி.எம்.துரை.ஆனந்த், என்.குணசேகரன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



கழகத் தலைவர் –முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் நிதிநிலை அறிக்கையை கண்டித்து மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, மாநில தீர்மானக்குழு செயலாளர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ குழந்தை வேலு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றினார். உடன் மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், கழக நிர்வாகிகள் மா ஜெயராம், தனச்செல்வம் மாநில நிர்வாகிகள் அக்ரி கணேசன், சம்மட்டிபுரம் கணேசன், அதலை செந்தில்குமார், சின்னம்மாள், மூவேந்திரன், வக்கீல் ராகவன், முருகவேல் இளைஞர் அணி சவுந்தர்ராஜன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



விருதுநகரில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழகத்திற்கு நீதி வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து விருதுநகர் தெற்கு வடக்கு மாவட்டக் கழக சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாநிலங்களவை உறுப்பினர் கிரிராஜன் தலைமையில் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.சீனிவாசன் ராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். தங்க பாண்டியன் முன்னிலையில் நடைபெற்றது.



திண்டுக்கல் கிழக்கு, மேற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் தலைமையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் வட்ட கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து அமைப்புகளில் உள்ள நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாநகரம் அண்ணா கலையரங்கம் அருகில் வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஒன்றிய அரசைக் கண்டித்து கண்டன முழக்கங்கள் எழுப்பினார்கள். இதில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி, மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணித் தலைவர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி., வேலூர் மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.அமலு, முன்னாள் எம்.எல்.ஏ. சி.ஞானசேகரன், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.பாண்டியன், ஜி.எஸ்.அரசு, மாநகராட்சி மேயர் திருமதி.சுஜாதா, மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் மு.பாபு மற்றும் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர் – முதல்வர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரை வடக்கு, மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து வாடிப்பட்டியில் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., அவைத்தலைவர் பாலசுப்ரமணியன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா ஆகியோர் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகள் புதூர் சேகர், வழக்கறிஞர் ஆர்.பாலாஜி, ஏர்போர்ட் பாண்டியன், இளமகிழன், செல்லம்பட்டி முத்துராமன், கொம்பாடி தங்கம், எம்.முத்துராமலிங்கம், எஸ். சேதுராமன், கொடி சந்திரசேகர், மு.பால்பாண்டியன், பால ராஜேந்திரன், சிறைச்செல்வன், பொதும்பு தனசேகர், தன்ராஜ், கொ.தனபாண்டியன், மதன்குமார், வக்கீல் கலாநிதி, உமா சிங்கத்தேவன், ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், கீர்த்திகா தங்கபாண்டியன், சுவிதா விமல், பெ.சசிக்குமார், மருதுபாண்டியன், கிருஷ்ணபாண்டி, உசிலை சிவா, ஈஸ்வரன், சோழவந்தான் ஜெயராமன், சத்தியபிரகாஷ் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.




திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் திருச்சி தெப்பக்குளம் தபால் நிலையம் அருகில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழிகாட்டுதலோடு, மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் தலைமையில் சட்ட மன்ற உறுப்பினர் எஸ். இனிகோ இருதயராஜ் முன்னிலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாவட்டக் கழக நிர்வாகிகள் வண்ணை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, ஆர்ப்பாட்டத்தில் முடிவில் பகுதிச் செயலாளர் மோகன் நன்றியுரை ஆற்றினார். பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் ஒன்றிய பி.ஜே.பி. அரசின் நிதி நிலை அறிக்கையை எதிர்த்து பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்ற கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.